புசிப்பு

செல்வநாதன் பிடரியில் கையை வைத்துக் கொண்டு குடிக்கூலிக்கு இருந்த வீட்டுக் கூடத்தின் நடுவில் ஏதோ லயிப்பில் நின்று கொண்டிருந்தான். இடுப்பில் குளிக்கப் போவதற்கு அறிகுறியாகத் துண்டைக் கட்டிக் கொண்டிருந்தான். தோளில் வண்ணானுக்குப் போட்ட மலையாள முண்டு, உடம்பைத் துவட்டிக் கொள்வதற்காக. என்ன வாழ்வு ! என்ன உலகம் ! பகுத்தறிவு தான் உண்மை என்று புத்திக்குத் தோன்றுகிறது. ஆனால் வாழ்வில், உலகத்தில் நடப்பதெல்லாம் இதை மறுக்கின்றன. பகுத்தறிவுப்படி—விஞ்ஞானத்தின்படி—குறிப்பிட்ட விதை குறிப்பிட்ட செடியாகத்தானே விளைய வேண்டும் ? அதே போலக் குறிப்பிட்ட மரம் குறிப்பிட்ட விதையிலிருந்துதானே வந்திருக்க வேண்டும் ? கல்லூரிப் பட்டம் என்னும் விதை அவனுக்கும் கிடைத்தது. அவன் நண்பன் செங்கமலத்திற்கும் கிடைத்தது. ஆனால் இவன் தாலூகா ஆபீசில் பேனா ஓட்டியாக இருக்கிறான். மூன்று குழந்தைகளும் கணவன் மனைவியும் அடங்கிய இவன் குடும்பத்திற்குச் சர்க்கார் அளந்த படி 87 ரூபாய். செங்கமலம் பெட்ரோல் பங்கில் மானேஜர், சம்பளம் ஒரு சைபர் கூட—870! ஒரே பட்டப்படிப்புத் தான் ! ஒரே விளைவை அளிக்கவில்லையே ! பகுத்தறிவு இங்கே தோல்வி அடைந்துவிட்டது. இந்த 87-ஐ வைத்துக் கொண்டு முப்பதை ஓட்டும் கலை...கொலை...மலை... எப்படி முடியுமோ ?

"என்னுங்க! குளிக்கல்லிங்களா? சவுக்கத்தைக் கட்டிக்கிட்டுக் கால் மணிக்கு மேலே ஆச்சே, இல்லே குழாய் கூடத்துக்கு வருமான்னு பாக்கிறீங்களா!"

"கோவிச்சுக்காதே. ஏதோ நெனைப்பு. தட்டைப் போடு; இதோ வந்திடறேன்."

இப்படிச் சொல்லிக்கொண்டே செல்வநாதன் குழாய் அருகில் நகர்ந்து குழாயைத் திருப்பி விட்டான். அப்பொழுது குழாய்க்கு அடியில் நயாபைசா ஒன்று பளிச்சிட்டது. செல்வநாதனுக்கு அதன்மீது நாட்டம் விழவில்லை. 'பிசாத்து! ஒரு நயாபைசாவினுல் என்ன உபயோகம்! எடுத்தாலும் எனக்கு ஒரு நயாபைசா அகப்பட்டதென்று பெருமையாகப் பிறரிடம் சொல்லிக் கொள்ள முடியுமா? முடியாதே. இதை எடுக்காமல் இருப்பதும், எடுத்துவிட்டு திருடனைத் தேள் கொட்டினுற்போல இருப்பதும் ஒன்று தானே?'

ஆகையால் அதை எடுக்காமல் செல்வநாதன் குழாயடியில் உட்கார்ந்து கொண்டான். தலையில் குழாய்த்தண்ணீர் விழுந்தது. பாபநாசம் நீர்வீழ்ச்சியில் முழுகுகிருர்களே இப்படித்தான் இருக்குமோ அல்லது இன்னும் இன்பமாக இருக்குமோ? ஆனுல் அதற்கெல்லாம் காசு வேணுமே! 87-ஐ முப்பதால் வகுக்க முடியும். ஒரு நாளுக்கு 2 ரூபாய் 90 நயா பைசா செலவு செய்யலாம். கடன் ஏற்படாது. இது கணக்கு. வாழ்வில் முதல் வாரத்துக்குப் பிறகு 87 ந. பைசாகூட இருப்பதில்லையே! பர்சு காலியாக இருக்கப் படாதென்று ஒரு நயா பைசாவுடன் பர்ஸ் எத்தனை நாள் இருந்திருக்கிறது! ஒரு நயா பைசா அவ்வளவு அலட்சியமென்ருல் பையைக் காலியாக வைத்திருக்க வேண்டாமா? ஆமாம், ஆமாம். ஒவ்வொன்ருக நூருே, ஒருமிக்க நூருே? பைசாவை அலட்சியம் செய்யக்கூடாது. நயாபைசாவானுலும் அலட்சியப் படுத்தக்கூடாது.

'ஆமாம்' என்று செல்வநாதன் நயாபைசாவை எடுத்துத் தண்ணீர்த் தொட்டியின் விளிம்பின்மேல் வைத்துவிட்டுக் குளித்துக் கொண்டிருந்தான். செங்கமலத்துக்கு இந்த விசாரமெல்லாம் இருக்கமுடியாது.

"இன்னுமா குளித்து முடியல்லே? மணியாயிடுச்சே" என்று எழுந்தது மனைவியின் குரல். அவ்வளவுதான். செல்வநாதன் அவசர அவசரமாகப் பாக்கிக் குளியலை முடித்துக் கொண்டு சாப்பாட்டுக்குப் போய் உட்கார்ந்தான்.

ஒருவழியாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு குழாயண்டை கையலம்பப் போன பொழுதுதான் குளித்துவிட்டு வரும்போது கண்டெடுத்த நயாபைசாவை எடுத்துக் கொண்டு வரத் தவறிவிட்ட விஷயம் நினைவுக்கு வந்தது. கையை அலம்பிக் கொண்ட பிறகு தண்ணீர்த் தொட்டியைப் பார்த்தபொழுது அதில் நயாபைசாவைக் காணவில்லை. அதிருஷ்டம் கிளையில் வந்து குந்தும் குருவி மாதிரி. இருக்கிறதென்று நினைத்துக் கொண்டிருப்போம்; விருட்டென்று பறந்துவிடும். ஒரு நயாபைசா என்ன, ஓர் ஆயிர ரூபாய் என்ன? அலட்சிய புத்திதான் இந்த அவலத்துக்கெல்லாம் காரணம். வாழ்விலும் உலகத்திலும் எதை அலட்சியப்படுத்துகிறேமோ அதுவே நம்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளவரும். பைசாவாயிருந்தாலும் செல்வந்தானே? இயல்பாகப் போற்றி வழிபட வேண்டியதற்குப் பதிலாக, பொருளுக்கு வலுக்கட்டாயமாக-குழந்தைகளின் உடல்நலனைப் பாதுகாக்கப் பாலடையில் விளக்கெண்ணெயை விட்டுத் தாயார் ஊற்றுவதுபோலச்-செல்வநாதன் மரியாதை செலுத்தினானே, அதில்தான் அவன் தோல்வியின் இரகசியம் ஒளிந்து கொண்டிருந்தது. நயாபைசாவைப் பார்த்தபொழுதே செல்வத்தின் சின்னத்துக்கான வணக்கத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறியதால் இயற்கையின் நியதி வஞ்சம் தீர்த்துக் கொண்டுவிட்டது. இம்மாதிரி விழிப்பில்லாத ஆள் 30

நாளைக்கு 87 ஆகத்தான் இருக்க முடியுமே அல்லாது செங்கமலத்தைப் போல் ஹாய்யாக இருக்க முடியாது.

செல்வநாதன் உள்ளே வந்து கையைத் துடைத்துக் கொண்டு, "தண்ணித் தொட்டி மேலே ஒரு நயா பைசா வைத்தேனே, பார்த்தாயா ?" என்று மனைவியைக் கேட்டான்.

"நான் பார்க்கவும் இல்லை ; எடுக்கவும் இல்லை."

"பின்னே யார் எடுத்திருப்பார்கள் ?"

"ஒரு பைசாதானே ? போனால் போகட்டுமே"

"ஒவ்வொன்றாக நூறா, ஒருமிக்க நூறா ? பைசாவை நாம் பார்த்துக் கொண்டால் ரூபாயை அதுவே பார்த்துக் கொள்ளும்!"

"அப்படியா சமாசாரம் ? நயா பைசாவைத் தேடுங்கள். மணி ஒன்பதரைதான் ஆச்சு."

ஒன்பதரை மணி என்ற வார்த்தையைக் கேட்டதும் செல்வநாதனுக்குக் காரியாலய ஞாபகம் வந்துவிட்டது. முதலிலேயே இந்த அலட்சிய புத்தி இல்லாமல் இருந்திருக்க வேண்டும். இன்றைத் தினத்துக்கு மட்டும் அல்ல ; சம்பாதிக்க என்று தலையெடுத்த பிறகு, பணம் சம்பாதிப்பதில் பிசகில்லை என்ற சின்ன உண்மை தெரியாததனால் எவ்வளவு அவலமான நிலை ! முப்பது நாளைக்கு எண்பத்தேழு! அந்தப் பாடந்தான் இன்றும் தெரிந்தது. இன்று முதல் வேறு ஆள் என்று மனத்தில் தியானம் செய்து கொண்டே காரியாலயத்துக்குக் கிளம்பினான்.

அதற்குப் பிறகு செல்வநாதனைக் காரியாலயத்தில் பார்த்தவர்களுக்கு அவனிடத்தில் ஏதோ புதுமை தெரிந்தது. மேக மண்டலத்தில் மிதந்து கொண்டிருந்தவன் பூமியில் காலூன்றி நடப்பதுபோல் தோன்றிற்று. இந்த மாறுதல் வெளிப்படையாகத் தெரிந்ததால், "என்ன புது

ஆளாகி விட்டாயே!'' என்றுகூட இரண்டொருவர் கேட்டு விட்டார்கள். மனத்தில் தீவிர மாறுதல் ஏற்பட்டால் உடனே உடலில் பிரதிபலிக்காமல் போகாது போலிருக்கிறது என்று செல்வநாதன் நினைத்து மகிழ்ந்து கொண்டான். உண்மையாகவே, அன்று புதிதாகப் பிறந்த உணர்ச்சி உண்டாகிவிட்டது. இந்த மிடுக்கோடுதான் மாலை 5 மணிக்குத் திருவல்லிக்கேணியிலிருந்து பனகல் பார்க்குக்குப் போக, பஸ்ஸில் ஏறினன்.

பஸ்ஸில் அதிகக் கூட்டம் இல்லை. வண்டிக்குள் செல்வநாதன் ஏறிப் போன சமயம் எல்லா இடங்களிலும் பிரயாணிகள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். தொங்குகிற வௌவாலாக நிற்கும் பிரயாணி ஒருவரையும் காணவில்லை. செல்வநாதன் ஓர் இடத்தண்டை போய் நின்ற நிமிஷத்தில் அங்கு உட்கார்ந்திருந்தவர் எழுந்து வண்டியை விட்டு இறங்கினர். செல்வநாதனுக்கு ஓர் இடம் கிடைத்தது. அவனுக்கு இடம் கிடைக்கு முன்பே அவன் கண்ணுக்கு ஒரு பொருள் தென்பட்டுக் காலி இடத்தில் உடனே உட்காரும்படி தூண்டிற்று என்று சொல்வது பின்னும் பொருத்தமாக இருக்கும். அந்தப் பொருளின் மௌனமான அழைப்பு இல்லாவிட்டாலும் அங்கு உட்கார்ந்துதான் இருப்பான். இப்பொழுது விசேஷம் என்னவென்ருல், அந்த இடத்தில் உட்கார்ந்ததும் அந்தப் பொருளின்மீது தன் வலக் கையை அழுத்திக் கொண்டு உட்கார்ந்தான் என்பதுதான்.

அவனை மௌனமாக அழைத்த பொருள் ஒரு காகிதத்தில் சுற்றப்பட்டிருந்தது. உள்ளே இருப்பது என்ன சாமான் என்று தெரியவில்லை. எனவே, எந்த உலோகத்தால் ஆகியது என்பதும் தெரிய இடம் இல்லை. செல்வநாதன் வந்தவுடன் ஒருவன் எழுந்து இடத்தைக் காலி செய்தானே, அவனுடையதாக இருக்க முடியாது. ஏனென்ருல் அதை அவன் எடுத்துக் கொண்டுபோகவில்லை. அவனதாக இருந்தால்கூட எடுத்துக் கொண்டு போக மறந்துவிட்டான்.

செல்வநாதன் அந்த இடத்தில் உட்கார்ந்ததும் அவனது வலக் கை அந்தப் பொருளைத் தானாகவே போய் மூடி அழுத்திக்கொண்டு விட்டது. மனம் என்பது எஜமான்; புலன்களும் கர்மேந்திரியங்களும் விசுவாசமுள்ள நாய்கள். எஜமான் சொற்படி சூ என்றால் பிடித்துக் கொண்டுவிடும். அலட்சியப்படுத்தாதே என்ற மந்திரத்தை மனம் ஏற்றுக் கொண்டது முதல், உடல் உத்தரவை நிறைவேற்றக் காத்துக் கொண்டிருந்தது. ஒரு பைசாவுக்கு மேல் பெறும்படியான சாமானாயிற்றே! அலட்சியப்படுத்தக் கூடாதென்று கை தானாகச் சிந்தித்து முடிவு செய்துவிட்டது போல் இருந்தது.

உள்ளே இருப்பது வெள்ளித் தம்ளராக இருக்கலாம் குறைந்தது 25 ரூபாய் பெறும். அது, எழுந்து போனவனுடைய சாமான் அன்று. செல்வநாதனுக்கு வலக்கைப் புறத்தில் ஒருவர் உட்கார்ந்திருந்தாரே, அவருடையதாக இருக்கக்கூடாதென்று சொல்வதற்குப் போதுமான காரணம் யாதொன்றும் இல்லை. ஆனாலும் அவருடையது அல்ல என்று அவன் மனத்தில் ஏனோ பட்டுவிட்டது.

வலக்கைப்புறத்தில் இருப்பவர்க்கும் அந்த சாமானுக்கும்-வெள்ளித்தம்ளருக்கும்- சம்பந்தம் உண்டா என்று தெரிந்தாக வேண்டும். அதைத் தெரிந்து கொண்டால் தான் அவன் புது மனிதனாக மாறியிருப்பதற்கு அடையாளமாகும். தான் இறங்க வேண்டிய பனகல் பார்க்கிலே இந்தச் சாமானை எடுத்துக் கொண்டு இறங்கி விடுவதாக இருக்கட்டும். ஒருகால் இந்த வெள்ளிப் பாத்திரம் வலக்கைப் புறத்தில் இருப்பவருக்குச் சொந்தமாக இருந்து செல்வநாதன் செய்வதைப் பார்த்துவிட்டு. "என்னங்க ரொம்ப நல்ல காரியம் பட்டப் பகலிலே பகிரங்கமாகப் பண்றீங்களே!" என்று கேட்டுவிட்டால்?

வாஸ்தவம். சொத்துச் சேர்ப்பதில் வீண் பரபரப்புக் கூடாது. விழிப்பு இருக்கவேண்டும். அதனுடன் நிதான

மும் முன்யோசனையும் பொறுமையும் அவசியம் வேண்டும். பனகல் பார்க்குக்கு முன்னால் வெள்ளித் தம்ளர்கிடைத்தால் என்ன, பஸ் நிற்கும் இடம் வரையில் போய்க் கிடைத்தால் என்ன? பனகல் பார்க்குக்கு முன்னால் செல்வத்தைச் சம்பாதிப்பதில் அபாயம் இருக்கிறது; பஸ் நிற்கும் இடத்தில் கிடைத்தால் எந்த மனவேதனையும் இல்லை.

இம்மாதிரி எண்ணி முடிவு செய்துகொண்டு பனகல் பார்க்கில் இறங்க வேண்டியவன் பஸ் முடிவாக நிற்கும் இடம் வரையில் போய்விடத் தீர்மானம் செய்துகொண் டான்.

முடிவாக நிற்கும் இடத்துக்குப் பஸ் வந்து சேர்ந்தது. வண்டிப் பிரயாணிகள் அவசர அவசரமாக இறங்கினார்கள். செல்வநாதன் நினைப்பெல்லாம்—கவனமெல்லாம்—கண்ணெல்லாம் வலப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரின் கைகளின்மேல் பதிந்திருந்தது, வெள்ளிப் பாத்திரத்தை நோக்கி வருகின்றனவா இல்லையா என்று. அத்துடன் வண்டியைவிட்டு இறங்குவதிலும் செல்வநாதன் அவசரம் காட்டவில்லை. எக்கச்சக்கத்தில் அகப்பட்டுக் கொள்ளாமல் செய்யவேண்டிய காரியம் என்ற நினைப்பு. அவனைத் தவிர வண்டியில் ஒருவரும் இல்லை. எல்லோரும் இறங்கிவிட்டார்கள். வெள்ளித் தம்ளரைத் தைரியமாக எடுத்துக்கொண்டு வண்டியிலிருந்து இறங்கினான்.

கீழே இறங்கினவுடன் உள்ளே இருப்பது என்ன என்று பார்க்க அவசரந்தான். ஆனால் பஸ்ஸிலிருந்து இறங்கியவர்கள் யாரேனும் இவன் தயக்கத்தைப் பார்த்துச் சந்தேகப்பட்டு, உண்மையை ஊகித்துவிட்டால்...?

இறங்கின இடத்தைவிட்டு 50 கஜம் தள்ளி நடந்து வந்து சாமானை மூடியிருந்த கடிதாசைப் பிரித்தான். வெறும் கண்ணாடித் தம்ளர்! எதெடுத்தாலும் ஒன்றரையணா வகை! செல்வநாதன் மனத்தில் தோன்றிய உணர்ச்சி

ஏமாற்றந்தான். 'இதற்காகவா இவ்வளவு தொந்தரவுக்கு உட்பட்டோம்?' என்ற எண்ணம் அறுத்தது உண்மைதான். 'முயற்சியும் புத்தியும் செல்வத்தை விளைத்துவிடமாட்டா. புசிப்பு வேண்டும்! எனக்கு அது இல்லை. அதனால்தான், அகப்பட்ட தம்ளர் கண்ணாடியாக இருக்கிறது!' கடிதாசைக் கோபத்தில் தெருவில் எறிந்துவிட்டு வீடு வந்துசேர்ந்தான்.

தம்ளரை மேசையில் வைத்ததைப் பார்த்தாள் மனைவி. "வாங்கிக்கொண்டு வந்தீர்களா ?"

"ஆமாம். பின் யார் இனாமாகக் கொடுக்கிறார்கள்? இரண்டரையணா ஒன்றரையணாக் கடை வியாபாரம்."

"தம்ளர் பரவா இல்லை" என்று மனைவி அதன்அழகைச் சோதிக்கத் தொடங்கினாள்.